விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25

ஒலி 261 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 20 வியாழக்கிழமை (05.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


### தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தினால்

# அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் எச்சரிக்கை



(கொழும்பு)

தேர்தல் நடைமுறைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் எடுக்கப்படும் அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## தபால் மூல வாக்களிப்பு ஆரம்பம்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று மற்றும் நாளை இடம்பெறும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது. 15

## அதிகரிக்கும் தேர்தல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,095 ஆக அதிகரித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை 15

### அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

## மக்களை தவறாக வழிநடத்த அரசாங்கம் முயல்கின்றது

### பெப்ரல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச ஊழியர்களிற்கு சம்பள உயர்வு என்ற அறிவிப்பின் மூலம் அரசாங்கம் பொதுமக்களைத் தவறாக வழிநடத்த முயல்கின்றது எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பெப்ரல் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் தபால்மூல வாக்களிப்பிற்கு முன்னதாக அரசாங்கம் பொதுமக்களை 15

### நாட்டின் பொருளாதாரம் சீராகவுள்ளது

## இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறத் தேவையில்லை

### ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் சீரான நிலையில் இருக்கும்போது இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தேவையில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 15

### தபால்மூல வாக்களிப்பை

## கண்காணிப்பதற்கு விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க விசேட வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை முன்னிட்டு 900க்கு மேற்பட்ட கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக ஃபெப்ரல் அமைப்பின் நிறை 15

## நாட்டை வங்குரோத்தாக்கியவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(புத்தளம்)

ஊழல் மற்றும் மோசடிகளால் நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றவர்களுக்கு எதிராக தங்களது அரசாங்கத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் இடம்பெற்ற தேர்தல் பிர 15

### விஷ ஜந்து தீண்டியதில்

## புங்குடுதீவில் கடற்றொழிலில் ஈடுபட்ட இளைஞன் மரணம்



(யாழ்ப்பாணம்)

விஷ ஜந்து தீண்டியதில் புங்குடுதீவில் கடற்றொழிலில் ஈடுபட்ட இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த ரவி ரஜீவன் (வயது-24) 15

## மருதனார்மடத்தில் வீதி விபத்து 4 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருதனார்மடம் பகுதியில் முச்சக்கர வண்டி மதிலுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் 4 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் 15

### பரந்தன் ஏ9 வீதியில்

## இரண்டு மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

### ஒருவர் பலி; ஒருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியானதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்றிரவு 8 மணியளவில் கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பரந்தன் ஏ9 வீதியில் இடம்பெற்றுள்ளது. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டையில் வீடு புகுந்து வன்முறைக் குழு அட்டகாசம்

## வன்முறையாளர்களைக் கைது செய்யுமாறு பொலிஸ் நிலையம் முன் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வன்முறைக் கும்பல் ஒன்று வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கணவத்தைப் பகுதியில் நேற்றிரவு வீடு புகுந்து தாக்குதல் நடாத்தியுள்ளது. இதன்போது சிறுவர்கள், பெண் உட்பட ஐவர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன் ஊரவர்கள் இணைந்து வன்முறையில் ஈடுபட்டவர்களை கைது செய்யுமாறு கூறி பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் கவனயீர்ப்பிலும் ஈடுபட்டனர்.

இது குறித்து பாதிக்கப்பட்ட பெண் கருத்து தெரிவிக்கையில்,

அறுவர் கொண்ட கும்பல் வன்முறைக்காக வந்து, இருவர் வெளியே நின்ற நிலையில் நால்வர் கொண்ட கும்பல் உள்ளே வந்து எனது 5 வயது மகளின் வயிற்றில் தாக்கினர். எனது சகோதரி பிள்ளைக்கு பாலூட்டிக் கொண்டு இருந்தவேளை அவர் மீதும் தாக்குதல் நடாத்தினர். அத்துடன் மோட்டார் சைக்கிள் விபத்தில் பாதிக்கப்பட்ட எனது சகோதரன் மீதும் தாக்குதல் நடாத்தினர். எனது மகனான சிறுவனது தொண்டையை பிடித்து திருகினர்.

இவ்வாறு அட்டகாசம் செய்ததுடன் வேலியின் தகரம் மற்றும் கதிரை என்பவற்றை உடைத்தனர். எமது மோட்டார் சைக்கிளையும் கீழே தள்ளி விழுத்தினர். பிள்ளைக்கு பால் கொடுக்கும் போது தாக்குதலுக்கு உள்ளான எனது சகோதரி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எமக்கு இந்த அநீதி இழைத்தவர்களை வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் எமக்கான நீதிக்கு மேல் அதிகாரிகளை நாட வேண்டி ஏற்படும் என்றார். (ம-7)

# எவருக்கும் நான் ஆதரவில்லை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா

(கொழும்பு)

எதிர்வரும் ஜனா திபதித் தேர்தல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அரசியல் கட்சியொன்றை ஆதரிப்பதாக அரசியல் மேடைகளில் சிலரால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொடர்பில் தனது கவனத்தைச் செலுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல வேட்பாளர்கள் தங்களின் ஆதர வைக் கோரியிருந்தாலும், இந்தத் தேர்தலில் நடுநிலை வகிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் இருப்பினும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமார துங்க அறிவித்துள்ளார். (ம-7)

# வாகன விபத்து இருவர் காயம்

## தெல்லிப்பளையில் சம்பவம்

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பிரதான வீதியின் தெல்லிப்பளைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து சம்பவம் நேற்றிரவு 9.30 மணியளவில் மோட்டார்சைக்கிளுடன் மிதிவண்டி ஒன்று மோதியதிலேயே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது. (ம-7)

# தொடரும் யுக்திய 690 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 690 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 677 ஆண்களும் 09 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 18 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 04 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 89 கிராம் ஹெரோயின் 231 கிராம் ஐஸ் , 201 கிராம் கஞ்சா , 103 கிராம் கஞ்சா ஆகிய போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-7)

# பொருளாதார நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்தினார் மத்திய வங்கி ஆளுநர்

9கொழும்பு)

நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நேற்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தினார்.


பாராளுமன்றில் மேலும் கருத்துரைத்த அவர்,

இலங்கையில் பணவீக்கம் 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

கொள்கை வட்டி வீதத்தைக் குறைக்க முடிந்ததாகத் தெரிவித்த வீரசிங்க, மாற்று விகிதத்தை ஸ்திரப்படுத்துவதன் மூலம் ரூபாயை பலப்படுத்த முடிந்ததாகவும் தெரிவித்ததோடு,

இதேவேளை, இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள போதிலும் வங்கி முறை வீழ்ச்சியடைவதை தடுக்க முடிந்தமை விசேட விடயம் என சுட்டிக் காட்டினார். மத்திய வங்கி சட்டம் மற்றும் அதனை ஒழுங்குபடுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட புதிய சட்டங்கள் வங்கி அமைப்பு முறைமை அதற்கு உதவியாக இருந்த தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மரண அறிவித்தல்



பிறப்பு 1947 - 07 - 02

இறப்பு 2024 - 09 - 04

### மங்கையற்கரசி இலகுநாதன்

இணுவில் மேற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இலகுநாதன் மங்கையற்கரசி அவர்கள் நேற்று 04.09.2024 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(1862)

## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் தெற்கு கோப்பாயைப் பிறப்பிடமாகவும் ஞான வைரவர் கோவிலடி இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

### கந்தையா ஜெயக்குமார்



அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனை பிரார்த்திகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 26.12.1966

மறைவு 04.09.2024

முருகையா குடும்பம்
இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை
யாழ்ப்பாணம் இலங்கை

ஞானவைரவர் கோவிலடி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(1123)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கச்சார்பற்று செயற்படுங்கள்!

## ஊடகங்களுக்கு தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்து

(கொழும்பு)

**நாட்டின் அனைத்து ஊடக நிறுவனங்களும் தேர்தல் சட்டங்களை மதித்து பக்கச்சார்பற்ற வகையில் செயற்பட வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.**

சில ஊடக நிறுவனங்கள் சில வேட்பாளர்களுக்கு சார்பான வகையில் செயற்படுவதாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறான ஊடக நிறுவனங்கள் தொடர்பில் ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த அறிவுறுத்தல்களை பின்பற்றத் தவறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.


இவ்வாறு விதி மீறல்களில் ஈடுபடும் ஊடக நிறுவனங்களுக்கு தேர்தல் ஆணைக் குழுவினால் வெளியிடப்படும் ஊடக அறிக்கைகள் வழங்கப்படாது எனவும் அதிகாரபூர்வ தேர்தல் முடிவுகள் வழங்கப்படாது எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி)

# பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரனுடன் சிறீதரன் எம்.பி சந்திப்பு

(லண்டன்)

பிரித்தானியாவின் முதல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழத்தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவருமான உமா குமரனுக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பு பிரித்தானியப் பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தமிழ் மக்களின் மீது இலங்கை அரசால் கட்டமைக்கப்பட்ட வகையில் புரியப்பட்ட இனப்படுகொலை, அதற்கான நீதிப் பொறிமுறை, ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் சமகால இன ஒடுக்குமுறைகள், மக்களின் அடுத்தகட்ட எதிர்பார்ப்புகள் நோக்கிய அரசியல் முன்னகர்வுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.



குறித்த சந்திப்பில் பிரித்தானிய தொழிற்கட்சிக்கான தமிழர்கள் அமைப்பின் பிரதிநிதி சென் கந்தையா மற்றும் பிரித்தானியாவின் சிரேஷ்ட சட்டத்தரணிகளுள் ஒருவரான கணா கணநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மகாஜனக் கல்லூரி – ஸ்கந்தவரோதயக் கல்லூரி மோதும்

# "வீரர்களின் போர்"

"வீரர்களின் போர்" என வர்ணிக் கப்படும் யா/மகாஜனக் கல்லூரியும் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் மோதும் துடுப்பாட்டப் போட்டி எதிர் வரும் 7, 8 ஆம் திகதிகளில் (எதிர் வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில்) யா/மகாஜனக் கல்லூரி மைதானத் தில் நடைபெறவுள்ளது.

மகாஜனக் கல்லூரி முதல்வர் இ.புஸ்பரட்ணம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதல்வர் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெறும் இந்நிகழ் விற்கு முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட ஓய்வுநிலை விளை யாட்டு அதிகாரியும் மகாஜனக் கல் லூரி அவுஸ்திரேலியா கிளையின் பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த பா.கிருபாகரனும் சிறப்பு விருந்தினர் களாக மகாஜனக் கல்லூரியின் ஐக் கிய ராஜ்யம் கிளையின் பழைய மாண வர் சங்க செயலாளர் யு.ரூபராஜ், யாழ் மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுநர் எஸ்.சுரேஸ் மோகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-90)

# முதலிடத்தில் சீனா

(பாரீஸ்)

பிரான்ஸின் தலைநகரான பாரி ஸில் இடம்பெற்று வரும் பரா ஒலிம் பிக் போட்டிகளில் இதுவரை இடம் பெற்ற போட்டிகளின் அடிப்படையில் 56 தங்கம், 41 வெள்ளி மற்றும் 23 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக 120 பதக்கங்களைப் பெற்று சீனா முதலிடத்தில் உள்ளது.

மேலும் பதக்கப் பட்டியலில் இரண் டாம் இடத்தில் 67 பதக்கங்களுடன் பிரித்தானியாவும், 3 ஆவது இடத்தில் 57 பதக்கங்களுடன் அமெரிக்காவும் உள்ளன.


இதுவரையில் ஒரு வெள்ளிப்பதக் கத்தை மாத்திரம்வென்றுள்ள இலங்கை இந்தப் பட்டியலில் 62ஆவது இடத்தி லுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 250 | 250-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 160 | 180 | 150-180 | 200 |
| தக்காளி | 200 | 200 | 240 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 300 | 200 | 200-250 | 200 |
| கோவா | 250 | 320 | 250 | 350 | 300 |
| கரட் | 300 | 300 | 400 | 300 | 320 |
| பூசணி | 80 | 60 | 100 | 60 | 80 |
| புடோல் | 70 | 120 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 200-250 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 300 | 220 | 220 | 250 |
| பாகற்காய் | 300 | 350 | 300 | 350 | 300 |
| வெண்டக்காய் | 100 | 100 | 100 | 70 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 150 | 250 |
| பயற்றங்காய் | 150 | 140 | 120 | 100-150 | 150 |
| லீக்ஸ் | 320 | 320 | 280 | 350 | 350 |
| பீற்றூட் | 100 | 140 | 150 | 120 | 150 |
| கறிமிளகாய் | 400 | 700 | 600 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 350 | 280 | 200 | 100-160 | 150 |
| போஞ்சி | 400 | 650 | 500 | 350 | 500 |
| கத்தரி தம்புள்ள | 250 | 200 | 250 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 150 | 140 | 200 | 80 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 200-250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 130 | 120 | 80-130 | 100-130 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 620 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 80 | 70 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3214

### லெனின்





### கோபி




### கார்த்தி




### சஞ்சய்




### அனுபா




### தீபன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரென சுற்றி வளைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு சந்தை

## அதிரடியாகக் கைப்பற்றப்பட்ட பொருட்கள்



(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு சந்தைப் பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு ஒன்றினை புதுக்குடியிருப்பு சுகாதாரத் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகரில் அமைந்துள்ள சந்தைப்பகுதியினை புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் மற்றும் பிரதேச சபையினர் இணைந்து நேற்று திடீர் சுற்றி வளைப்பினை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த பரிசோதனை நடவடிக்கையில் பாவனைக்கு உதவாத வகையில் இருந்த மரக்கறிகள், மீன்கள் , இறால் , பழங்கள் , உப்பு விற்பனையாளர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த விற்பனையாளர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

குறித்த சுற்றிவளைப்பு பரிசோதனை நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பி.சத்தியரூபன் உள்ளிட்ட சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபையினர் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.(நி-299)


# வாக்காளர் அட்டைகள் விநியோகப்பணி ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் நேற்று நாடு பூராகவும் ஆரம்பமாகியது.

அந்தவகையில் நாடு முழுவதிலும் தபால் ஊழியர்களால் வாக்காளர் அட்டைகள் வீடு வீடாகச் சென்று விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)






# 12 கோடிக்கும் அதிகமான தங்க பிஸ்கட்டுகளுடன் மூன்று இலங்கையர்கள் கைது

(டில்லி)

12 கோடிக்கும் அதிகமான பெறுமதியான தங்கபிஸ்கட் மற்றும் போதைப்பொருளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து வெளியேறிய இலங்கையைச் சேர்ந்த மூவர் பெங்களூர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இவர்களது கொண்டுவந்த பெட்டியில் கீழ் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்க பிஸ்கட்டின் எடை 3.23 கிலோ என பெங்களூர் சுங்கத்துறை தெரிவித்துள்ளது.இதனிடையே, இந்த மூவரும்போதைப்பொருள் உட்கொண்டு. ஆசன வாயில் மறைத்து வைத்திருந்தமையும் தெரியவந்துள்ளது. (நி)

# கிளிநொச்சியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி

## சந்தேக நபர் கைது

(தருமபுரம்)

சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தர்மபுரம் பகுதியில் பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக, குளக்கரை ஒன்றில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் 2.613 லீற்றர் கோடாவும், 24 லீற்றர் கசிப்பும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (நி-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத இராசி பலன்கள்-2024




துலாம் (சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதங்கள்) பலன்கள்: எப்போதும் சதா சிந்தனையுடன் உலா வரும் துலா ராசியினரே!

நீங்கள் அதை செயற்படுத் துவ்திலும் வல்லவர். இந்த திட்டமிட்ட காரியங்கள் நன்றாக நடந்து முடியும்.

தொழில் வியாபாரம் எதிர் பார்த்தபடி சிறப்பாக நடக்கும். பணவரத்தும் அதிகரிக்கும். பழைய கடன்களைத் திருப்பி செலுத்தக் கூடிய நிலை உரு வாகும். நீண்ட நாட்களாக இருந்து வந்த ராஜாங்க ரீதியிலான சிரமங்களிலிருந்து விடுபடுவீர்கள். உத்தியோகஸ் தர்கள் நிலை மேம்படும். அரசாங்க அனுகூலம் ஏற்ப டும்.

உதவிகள் கிடைக்கும். விரும்பிய பொருளை வாங்கி மகிழ்வீர்கள்.

கலைத்துறையினருக்கு வாக னத்தை ஓட்டும் போது கவனம் தேவை. எதிர்பார்த்த தகவல்கள் தாமதமாக வரும். கூட இருப்ப வர்களிடம் எந்த விடயத்தையும் சொல்லும் போது கவனம் தேவை. பொருளாதாரம் உய ரும். எதிர்ப்புகள் விலகும். கடன் தொடர்பான பிரச்சினைகள் தீரும். பல வகையான யோகங்கள் ஏற் படும்.

அரசியல்துறையினருக்கு மன



பரிகாரம்: வெள்ளிக்கிழமை தோறும் அருகிலிருக்கும் சிவன் கோவிலில் உள்ள நவக்கிரஹ

## எப்போதும் சதா சிந்தனையுடன் உலா வரும் துலாம் ராசியினரே

மாதம் ராசிநாதன் சுக்கிரன் ராசியில் ஆட்சி பெற்று பலமாக அமர்ந்திருக்கிறார். எதிலும் முன்னேற்றம் காணப்படும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்.

முக்கிய நபரின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். நண் பர்கள் மூலம் உதவி கிடைக் கும். மரியாதை கூடும்.

குடும்பத்தில் இருந்த குழப் பங்கள் நீங்கும். வேடிக்கை வினோத நிகழ்ச்சிகளில் குடும்பத்துடன் சென்று கலந்து கொள்ள நேரிடும். சிலருக்கு திருமணம் கைகூடும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் ஏற்படும். பிள்ளை களால் நன்மை கிடைக்கும்.

பெண்களுக்கு எதிர்பார்த்த குழப்பம் நீங்கும். ஆனால் பிறருடன் பழகும் போது நிதானம் தேவை. தொழிலில் முன் னேற்றம் காணப்படும். பொரு ளாதார முன்னேற்றம் உண் டாகும். பழைய பாக்கிகள் வசூ லிப்பது வேகம் பிடிக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் வெற்றிபெற எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும்.

சந்நிதியை ஒன்பது முறை வலம் சென்று வழிபடவும் ;

**அதிஷ்ட கிழமைகள்:**
**வளர்பிறை:** திங்கள், புதன், வெள்ளி
**தேய்பிறை:** திங்கள், வியாழன், வெள்ளி ;
**சந்திராஷ்டம தினங்கள்:** 23, 24 ;
**அதிஷ்ட தினங்கள்:** 16, 17

---




விருச்சிகம் (விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை) எடுத்த வேலையைக் கொடுத்த நேரத்தில் செய்து பேர் எடுக்கும் விருச்சிக ராசியினரே!

நீங்கள் நிதானமாக செயற்ப

மனத்தெம்பு உண்டாகும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் கைகூடும். வாக்கு வன்மையால் காரியம் கைகூடும். ஆன்மிக எண்ணம் உண்டாகும்.

தொழில், வியாபாரம் நல்ல நிலைக்கு உயரும். போட்டிகள் நீங்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். தேவையான நிதி யுதவி கிடைக்கும். உத்தியோ கத்தில் இருப்பவர்கள் முன் னேற்றம் காண்பார்கள். நிலு வையில் உள்ள பணம் வந்து சேரும். நிர்வாகத் திறமை

மூலம் உங்களின் செயற்பாடு களுக்கு ஆதரவு அதிகரிக்கும். பெண்களுக்கு மனோதைரியம் கூடும். சாமர்த்தியமான பேச்சால் எடுத்த காரியம் வெற்றிபெறும்.

கலைத்துறையினர் நன்மை, தீமை பற்றி கவலைப்படாமல் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை திறம்பட செய்வீர்கள். போட்டிகள் மறையும். ஒப்பந்தங் கள் தொடர்பான காரியங்கள் சாத கமாக பலன் தரும். மறைமுக எதிர்ப்புகள் மறையும். உங்களது வார்த்தைக்கு மதிப்பு கூடும்.



மாணவர் களுக்கு கல்விநிலை உயரும். எதிர்பார்த்த உதவி கள் கிடைக்கும்.

## எடுத்த வேலையை கொடுத்த நேரத்தில் செய்து பேர் எடுக்கும் விருச்சிக ராசியினரே

டுவதன் மூலம் பல காரி யங்களைச் சாதிக்க முடியும். இந்த மாதம் அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம். தனாதிபதி குரு ஏழாம் ஸ்தா னத்தில் இருப்பதால் தைரியம் அதிகரிக்கும்.

சகோதரர்கள் வகையில் மிக நல்ல பலனை எதிர்பார்க்கலாம். நினைத்த வசதிகள் கிடைக்கும். எதிலும் இலாபம் கிடைக்கும்.

வெளிப்படும். மேலிடத்தில் உங்க ளுக்கான அங்கீகாரம் கிடைக் கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். வீட்டில் திருமணம் போன்ற சுபகாரி யங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்கும். உறவினர்கள்

அரசியல் துறையினருக்கு கடன் தொடர்பான பிரச்சினை கள் தீரும். பணவரத்து கூடும். மனக்குழப்பம் நீங்கும். திற மையாக செயற்பட்டு பாராட்டு பெறுவீர்கள். சின்ன விடயத்துக் கூட கோபம் வரலாம். நிதான மாக இருப்பது நன்மை தரும். ராகுவின் சஞ்சாரம் பண வரத்தை தரும். வேற்று மொழி பேசும் நபரால் நன்மை உண்டாகும்.

பரிகாரம்: செவ்வாய்க் கிழமை தோறும் அருகிலி ருக்கும் முருகன் கோவிலுக்கு சென்று நெய் தீபம் ஏற்றவும்.

**அதிஷ்ட கிழமைகள்:**
**வளர்பிறை:** திங்கள், வெள்ளி
**தேய்பிறை:** திங்கள், வெள்ளி
**சந்திராஷ்டம தினங்கள்:** 25, 26
**அதிஷ்ட தினங்கள்:** 18, 19

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சிகள் என்ன முடிவெடுத்தாலும்
# தமிழ் மக்கள் என் பக்கமே
## நம்பிக்கை வெளியிட்டார் ஜனாதிபதி

(கொழும்பு)

தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளபோதும் இந்த நாட்டின் பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்களின் அமோக ஆதரவு எனக்கு இருக்கின்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விசேட நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இனம், சாதி, மதம் அன்றி நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் குறித்து கருத்தில் கொள்ளப்படும் தேர்தலை எதிர்கொள்வதில் மகிழ்ச்சியடைவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை விரைவாக ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக மாற்றாவிட்டால் 2035-2040 காலப்பகுதியில் மற்றுமொரு நெருக்கடி ஏற்படக்கூடும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் தாம் விரும்பிய அமைச்சரவையை நியமிக்காது நாட்டு மக்களால் தெரிவு செய்யப் பட்ட மக்கள் பிரதிநிதிகளை நியமிக்கவுள்ளதாகவும், இதற்காக மக்கள் தமக்கு விருப்பமானவர்களை புதிய பாராளுமன்றத்திற்கு அனுப்புவார்கள் என்றும் தெரிவித்தார். (நி)

# ஐ.எம்.எப் நிபந்தனைகள் நாட்டிற்கு பாதகமானதல்ல
## அநுரகுமார சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தில் இருந்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக விலகாது" என அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வர்த்தக கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ள நிபந்தனைகள் நாட்டுக்கு பாதகமானவை அல்ல எனவும் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் தலையிடமாட்டோம்-ரஷ்யா அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் தலையிடப் போவதில்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலை நெருங்கிக் கொண்டிருக்கின்ற தருணத்தில் ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற ரஷ்யாவின் நிலைப்பாட்டை இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ்.ட்ஜகார்யன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

நாங்கள் நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார் என தீர்மானிப்பது மக்களைப் பொறுத்த விடயம்.

நாங்கள் உங்கள் தெரிவை மதிப்போம் நீங்கள் தெரிவு செய்யும் எந்த ஜனாதிபதியுடனும் இணைந்து பணியாற்றுவோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# தேர்தல் கண்காணிப்பாளர்கள் வடக்கிற்கு விஜயம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழு வடமாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

அவர்கள் வட மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் பிரசார கூட்டங்கள் இடம்பெறும் பகுதிகளுக்குச் சென்று அவதானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துள்ளனர். (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>12 இல் செவ்<br>கி.பா 40<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்: A/L, Business(own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14748 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>12 இல் செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L, Fiber Freelancing (pvt)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14784 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 18 1/4<br>உயரம் :5'3"<br>தகைமை/தொழில்: A/L, Executive Assistant<br>எதிர்பார்ப்பு:அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/14749 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 55<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA Following<br>எதிர்பார்ப்பு: Engineer, QS, TO<br>தொ.இ: G/14787 |
| பிறப்பு:1982 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா 19<br>8 இல் செவ்<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்: A/L,Rice mill (own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/14751 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்: O/L, A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, உள்நாடு<br>தொ.இ: G/14788 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



# மணிவிழா வாழ்த்து

திரு.
சித்திரவடிவேலு தவராஜ்
(B.sc,PGDE,SLTS-I)





சேவை விபரம்


- தி/மூதூர் புனித அந்தோனியார் கல்லூரி (15.07.1998 - 03.12.1998)
- யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி (04.12.1998-06.01.2012)
- கிளி/பூநகரி மத்திய கல்லூரி (07.01.2012-08.01.2014)
- யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி (09.01.2014-22.10.2014)
- மா/இந்து தேசிய பாடசாலை (23.10.2014-06.07.2018)
- கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி (07.07.2018-03.01.2021)
- யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை (04.01.2021-04.09.2024)

வான் முகிலாடி வர
வைகறைக் காற்றினிலே
வல்லை வெளி தாண்டி வந்து
உயர்வான பணி நமக்கு
உயர்வாக தந்தவனே
உயர்தரத்தில் உயிரியலை
உயர்தரமாய் உவந்தளித்து
ஊனமான கல்விதனை
உவகையுடன் தந்தவனே
உம் பணி சிறக்க
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வரலாற்று பிரசித்தி பெற்ற தெல்லிப் பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்றுக் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.(படங்கள்-சிவசாந்தன்)



நல்லூர் கந்தனின் திருக்கல்யாணம் நேற்று முன்தினம் அழகாக நடைபெற்றது. (படங்கள்-சிவசாந்தன்)





மச்சமாய் அவதரித்து சக்கரமாய் இலவல்லி மடியில் தவழ்ந்த வல்லிபுர மாயவன் கொடியேற்றம் கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயப் பீடத்தின் முதலாவது பீடாதிபதி சோமசுந்தரம் கந்தையாவின் நினைவும் நினைவு விரிவுரையும் யாழ் பல்கலைக் கழக கிளிநொச்சி வளாக விவசாய பீட கோட்போர் கூட மண்டபத்தில் விவசாய பீடத்தின் பீடாதிபதி கே.பகீரதன் தலைமையில் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா கலந்து கொண்டார். நினைவு விரிவுரையினை யப்பான் நாட்டின் Kyushu பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்.DR-YASUHIRO MORITA நிகழ்த்தினார்.

(படம்-தேவானந்தன்)

# போதைக்கு அடிமையாகும் மாணவர்கள் சடுதியாக அதிகரிப்பு

## -பாராளுமன்றில் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிப்பெறும் தரப்பினர் போதைப்பொருள் ஒழிப்பு குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும். பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகும் வீதம் சடுதியாக அதிகரித் துள்ளமை பாரிய அச்சுறுத்தலாகும் என பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது போதைப்பொருள் ஒழிப்புக்கான அவதானிப்புக்கள் மற்றும் விதிப்புரைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவின் அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது.

நகர் மற்றும் கிராமப்புறங்களில் ஆண்.பெண் என்ற இருபாலாரும் வயது வேறுபாடின்றி போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார்கள்.

பாடசாலை மாணவர்களில் பெரும்பாலானோர் ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளமை பாரிய அச்சுறுத்தலாகும். பிலிப்பைன்ஸ், எகிப்து உள்ளிட்ட நாடுகள் போதைப்பொருள் பாவனையை முழுமையாக முடிவுக்கு கொண்டு வந்துள்ளன. இந்த நாடுகள் பின்பற்றிய வழிமுறைகளை எமது அறிக்கையில் உள்ளடக்கியுள்ளோம்.

தற்போது ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. எந்தத் தரப்பினர் ஆட்சிக்கு வந்தாலும் போதைப்பொருள் ஒழிப்பு குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும். நாங்கள் முன்வைத்துள்ள அறிக்கையை செயற்படுத்த வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார். (நி)

# வடக்கு-கிழக்கு அபிவிருத்தியை கண்டுகொள்ளாத அரசாங்கங்கள்

## மன்னாரில் சஜித் தெரிவிப்பு

(மன்னார்)

யுத்தத்தால் பாதிப்படைந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திக்காக நிலையான வேலைத்திட்டங்களை எதனையும் கடந்த கால ஜனாதிபதிகள் மேற்கொள்ளவில்லை என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


"சர்வதேச முதலீடுகளுடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் 9 மாகாணங்களையும் அபிவிருத்தியடையச் செய்யும் நிலையான வேலைத்திட்டங்கள் ஐக்கிய மக்கள் கூட்டணியின் அரசாங்கத்தில் மேற்கொள்ளப்படும்.

அதேபோன்று சுற்றுலாத்துறை ரீதியாகவும் புதிய தொழிற்சாலைகளை அமைத்தும் மன்னார் மாவட்டத்தை அபிவிருத்தியடையச் செய்வதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படும்எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடமை தவறிய குற்றத்திற்காக 30பேருக்கு மரணதண்டனை!

## வடகொரிய ஜனாதிபதி அதிரடி



**(பியாங்யாங்)—**

**வட கொரியாவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இதனை தடுக்க நடவடிக்கை எடுக்காமல், கடமை தவறிய குற்றத்திற்காக 30 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.**

கடந்த ஜூலை மாதம் பலத்த மழை காரணமாக அந்நாட்டின் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டதுடன், பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டது.

இதனால் 4 ஆயிரம் வீடுகள் சேதமடைந்தன.15 ஆயிரம் பேர் நிவாரண முகாம்களில் தஞ்சமடைந்திருந்தனர்

இந்நிலையில், வெள்ளம் மற்றும் நிலச்சரிவை தடுக்க அதிகாரிகள் தவறி விட்டனர் என்றும் அவர்கள் கடமையை சரியாக செய்யாததால் பேரிழப்பு ஏற்பட்டு உள்ளதுடன் அவர்கள் ஊழல் மற்றும் முறைகேட்டில் ஈடுபட்டு உள்ளனர்.

இந்நிலையில் அவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றும்படி கிம்ஜாங் உன் உத்தரவிட்டதுடன் இதனையடுத்து உயர் அதிகாரிகள் உட்பட 30 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. (நி)

## ஆங்கிலக் கால்வாயில் கவிழ்ந்தது படகு

### கர்ப்பிணி பெண் உட்பட 12 பேர் உயிரிழப்பு




(லண்டன்)

ஆங்கில கால்வாயில் குடியேற்றவாசிகளின் படகு கவிழ்ந்ததில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரான்ஸ் கடலோர பகுதியிலிருந்து இங்கிலாந்திற்குள் குடியேற்றவாசிகளுடன் செல்ல முயன்ற படகே கவிழ்ந்துள்ளது.

உயிரிழந்தவர்களில் பத்துபேர் பெண்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கேப்கிரிஸ் நெஸ் என்ற பகுதியில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என பிரான்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

படகில் அளவுக்கதிகமானவர்கள் காணப்பட்டனர். அதன் அடிப்பகுதி வெடித்தது. ஒரு சிலரே உயிர்காக்கும் அங்கியை அணிந்திருந்தனர் எனபிரான்ஸ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி)

## புரூனே மன்னரை சந்தித்து கலந்துரையாடிய மோடி



(புரூனே)

புரூனேவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 40 வருடகால தூதரக உறவை கொண்டாடும் விதமாக புரூனேவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் மோடி அந்நாட்டு மன்னர் ஹாஜி ஹசனல் போல்கியாவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இருநாட்டு உறவு, வர்த்தகம் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# உக்ரைனை தாக்கியது ரஷ்யா!

- 51 பேர் உயிரிழப்பு
- 271 பேர் படுகாயம்
- பதிலடி விரைவில் என்கிறார் ஜெலன்ஸ்கி



(கீவ்)

யுக்ரைனின் மத்திய பகுதியில் உள்ள பொல்டாவா நகரில் ரஷ்யா மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் 51 பேர் கொல்லப்பட்டதுடன் 271 பேர் படுகாயமடைந்துள்ளனர். இராணுவ நிறுவகம் ஒன்றின் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் இதன்போது அருகிலிருந்த வைத்தியசாலை ஒன்றும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்கான எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்ட போதிலும் அங்கிருந்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு போதுமான நேரம் இருக்கவில்லை என உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்துள்ள உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமீர் ஜெலன்ஸ்கி ரஷ்யாவுக்குப் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நீண்டதூர ஏவுகணை தாக்குதல்களை நடத்தித் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வான் பாதுகாப்பு கட்டமைப்புகளுக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மன்னார் மாவட்டத்தின் வளத்தை பேணுவோம்'

# வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் அமைதிப் பேரணிக்கு அழைப்பு

**(மன்னார்)**

**"மன்னார் மாவட்டத்தின் வளத்தை பாதுகாப்போம்" எனும் தொனிப் பொருளில் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னாரில் அமைதிப்பேரணி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.**

மன்னாரில் நேற்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப் பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்வடமாகாண கடற் றொழிலாளர் இணை யத்தின் ஏற்பாட்டில், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக் கத்தின் அனுசரணையில் வடமாகாண கடற்றொழி லாளர்களும் இலங்கை யின் ஏனைய மாவட்டங் களைச் சேர்ந்த கடற்றொழி லாளர்களும் இணைந்து "மன்னார் மாவட்டத்தின் வளத்தைப் பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் குறித்த பேரணியை முன் னெடுக்க உள்ளனர்.

மன்னார் மக்களுக்கும் மீனவர்களுக்கும்,பாதிப்பாக இருக்கின்ற கணிய மணல் அகழ்வு,காற்றாலை மின் உற்பத்தி,இந்திய மீனவர் களின் அத்துமீறிய வருகை, சூழலுக்கும்,மன்னார் மாவட்டத்திற்கு பாதிப்பான பண்ணை செயற்பாடுகளை நிறுத்தக்கோரியும் குறித்த அமைதி பேரணி முன்னெ டுக்கப்படவுள்ளது.

குறித்த பேரணிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மீனவர்கள் ஆதரவு வழங்க உள்ள னர்.எனவே அன்றைய தினம் மன்னார் மாவட்ட மீனவர்கள்,பொது அமைப் புக்களும் பூரண ஆதரவை வழங்க வேண்டும் என அன்னலிங்கம் அன்ன ராசா கோரிக்கை விடுத் தார். (நி-285)

## மாதகலில் படகு விபத்து மீனவர் மாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாதகல் கடல் பகுதியில் படகு விபத்துக்கு உள் ளானதில் கடற்தொழிலாளி ஒருவர் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளார். மாத கல் பகுதியைச் சேர்ந்த கடற் தொழிலாளர்கள் கடற்தொழி லுக்காக படகொன்றில் நேற்று புதன்கிழமை அதிகாலை கடலுக்கு சென்று இருந்தனர்.

அந்நிலையில் கடலில் படகு கவிழ்ந்து மூழ்கிய நிலையில் ஒருவர் கரையை நோக்கி நீந்தி வந்த வேளை சக கடற் தொழி லாளர்கள் கண்டு அவரை மீட்டு கரை சேர்ந் தனர்

மற்றையவர் கடலில் மூழ்கி காணாமல் போயுள் ளார். அவரைத் தேடும் பணி கள் தொடர்ந்து முன் னெ டுக கப்பட்டு வருகின்றன. (நி-33)

## இனியும் ஏமாற தயாரில்லை என்பதை வெளிப்படுத்த வேண்டும்

**தமிழ் பொதுவேட்பாளர்**

(மன்னார்)

இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியாக வருகிறவ ருக்கு தமிழ் பொது வேட்பாளர் என்கிற விடயம் ஒரு பாடமாக அமைய வேண்டும் என தமிழ் பொது வேட்பாளர் பா. அரிய நேத் திரன் தெரிவித் துள்ளார். மன்னாரில் ரெலோ அலு வல கத்தில் நேற்று இடம் பெற்ற மக்கள் சந்திப்பை தொடர்ந்து ஊடகங் களுக்கு கருத்து தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து பா.அரிய நேத் திரன் மேலும் தெரிவித்துள் ளதாவது" கடந்த காலங்களில் ஏற்பட்ட ஏமாற்றங்களின் விளை வாகவும் நாங்கள் தொடர்ந்தும் ஏமாறுவதற்கு தயார் இல்லை என்பதை காட்டு வதற்கான ஒரு களமாக இத் தேர்தலை மக்கள் பயன்படுத்த வேண்டிய ஒரு நிலைப்பாடு மக்கள் மத்தியில் இருக்கின் றது.இதன் காரணமாக இத் தேர்தலில் என்னை களம் இறங்கியுள்ளனர். இணைந்த வட கிழக்கில் இருக் கின்ற மக்கள் அதிகூடிய வாக்கு களை அளிக்க வேண்டும்.

ஒரு அடையாளத்திற்காக வே நான் சங்கு சின்னத்தில் போட் டியிடுகின்றேன்.நீங்கள் சங்கு சின்னத்துக்கு வழங்கும் வாக்கு உங்களுக்கானது. தமி ழன் தமிழனாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்.

இந்த நாட்டின் 9 ஆவது



ஜனாதிபதியாக வருகிறவ ருக்கு ஒரு பாடமாக இது அமைய வேண் டும்.எங்களை தலை வர்கள் ஏமாற்ற இருந் தாலும் மக்களாகிய நாங்கள் தயார் இல்லை என்பதை காட்ட வேண்டும்.

எங்களுடன் 7 தமிழ் கட்சி கள் இணைந்துள்ளன. எனி னும் இலங்கை தமிழரசு கட்சி அதில் இணையவில்லை. இலங்கை தமிழரசுக் கட்சியில் இருக்கும் ஒரு சிலர் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க கூடாது என்கிற முடிவை எடுத்துள்ளார்கள்.அது அவர் களின் உரிமை" என பா.அரிய நேத்திரன் தெரிவித்துள் ளார். (நி)

## இலங்கை சிறுவர்களில் மூன்றில் ஒருவர் போசாக்கின்மையால் பாதிப்பு

### அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் சிறுவர்க ளில் மூன்றில் ஒருவர் போசாக் கின்மையால் பாதிக்கப்பட்டுள் ளனர் என அறிக்கையொன்று தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை யிலேயே இந்த விடயம் இடம் பெற்றுள்ளது.

இலங்கையில் போசாக் கின்மை குறித்து ஆராய்வதற் காக நியமிக்கப்பட்டுள்ள குழு தனது அறிக்கையை பாரளு மன்றத்தில் நேற்று சமர்ப்பித் துள்ளது.குழுவின் உறுப் பினரான பாராளுமன்ற உறுப் பினர் ரோகிணி கவிரட்ண இந்த அறிக்கையை சமர்ப் பித்துள்ளார். (நி)

## கையூட்டு பெறமுற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் பணி இடைநிறுத்தம்

(தருமபுரம்)

பொதுமகனிடம் கையூட்டு வாங்க முறபட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் விவே கானந்தா நகர் பகுதியைச் சேர்ந்த நபர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணை மேற்கொண்ட கிளி நொச்சி பொலிஸ் அத்தியட்சகர் இருவரையும் பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார்.

குறித்த பொதுமகனிடமி ருந்து 5000 ரூபாய் பணம் பெற இருவரும் முயற்சித்துள் ளனர்.

இது தொடர்பாக விரிவான அறிக்கையை சமர்ப்பிக்கு மாறும், குறித்த இருவரையும் உடனடியாகப் பணியிலிருந்து இடை நிறுத்து மாறும் பொலிஸ் அத்தியட்சகர் உதவி பொலிஸ் அத்தியட் சகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இருவரும் கிளி நொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர்கள் என் பதும் குறிப்பிடத்தக்கது. (நி-316-100)

## வருட இறுதியில் டெங்கு தீவிரமடையும்!

(கொழும்பு)

தற்போதைய நிலவரத்துக் கமைய, எதிர்வரும் டிசம்பர் மாதத் திற் குள் நாட்டில் டெங்கு நோயா ளர்களின் எண் ணிக்கை அதிகரிக்கக் கூடும் என இலங்கை பொது சுகாதார பரி சோதகர்கள் சங்கம் எச்ச ரித்துள்ளது.

இது தொடர்பில் விளக்க மளித்துள்ள அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தற் போதைய மழையுடனான கால நிலை யையடுத்து டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட் டுள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன் டெங்கு நோய் அதிகளவில் பதிவாகும் பகு திக ளில் தற்போது நுளம் புகளின் பெருக்கம் அதி கரித்துள்ளது.

எனவே, இந்த நிலைமை தொடருமாயின் வருட இறுதியில் நாட்டில் டெங்கு நோய் பரவல் தீவிர மடையக்கூடும்.

எனவே அதனைத் தவிர்த் துக் கொள்வதற்கு டெங்கு ஒழிப்பு நடவடிக்கை களை முன்னெ டுக்க வேண்டும் எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங் கத்தின் தலைவர் உபுல் ரோ ஹன கோரியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கராயன்⇨பூநகரி⇨யாழ் பேருந்து சேவை மீண்டும் வேண்டும்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் இருந்து முக்கொம்பன் பூநகரி வழியாக மீண்டும் யாழ்ப்பாணத்திற்கான பேருந்து சேவை வேண்டும் என கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் அக்கராயனில் இருந்து முக்கொம்பன், பூநகரி வழியாக யாழ்ப்பாணத்திற்கான இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை ஒன்று நடைபெற்றது.

கந்தபுரத்திற்கும் முக்கொம்பனுக்கும் இடையில் வீதியில் ஏற்பட்ட பெரும் குழிகள் காரணமாக இப்பேருந்து சேவை இடை நிறுத்தப்பட்டது.

நிறுத்தப்பட்ட பேருந்து சேவை அக்கராயனில் இருந்து கிளிநொச்சி சென்று யாழ்ப்பாணம் பயணிக்கின்றது.

இந்நிலையில் தற்போது முக்கொம்பனுக்கும் கந்தபுரத்திற்கும் இடையிலான வீதி தற்காலிகமாக சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து தமது வழமையான நேரத்தின் படி அக்கராயனில் இருந்து பிற்பகல் 1.45 மணிக்கு சேவையினை தொடங்கி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், அக்கராயன் மகா வித்தியாலயம், கந்தபுரம் இல.01, இல.02 பாடசாலைகள், கண்ணகைபுரம் பாடசாலை, முக்கொம்பன் மகா வித்தியாலயம், பூநகரியின் பல பாடசாலைகளின் ஆசிரியர்களுடன் யாழ்ப்பாணம் வரை சென்று வரக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி வழியாக அக்கராயனுக்கு காலையில் வருகை தரும் பேருந்து ஒழுங்காக பயணிக்காததன் காரணமாக மேற்படி பாடசாலைகளுக்கு வருகின்ற ஆசிரியர்கள் குறித்த நேரத்தில் பாடசாலைகளுக்கு வருகை தர முடியாமல் இருப்பதாக தெரிவிக்கப்படும் நிலையில் மீண்டும் அக்கராயனில் இருந்து முக்கொம்பன் பூந கரி வழியாக யாழ்ப்பாணத்திற்கான பேருந்து சேவையினை நடத்துங்கள் என ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-350)

# மரமுந்திரிகை பண்ணையில் யானைகளால் தொல்லை

## தூர இடங்களிற்கு விரட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி ஜெயபுரம் வடக்கு மரமுந்திரிகை பண்ணையில் யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

1,000 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் மரமுந்திரிகை பண்ணை காணப்படுகின்றது. மரமுந்திரிகை விதை சேகரிப்பில் 100 இற்கு மேற்பட்டவர்கள் ஈடுபடுகின்ற நிலையில் மரமுந்திரிகை பண்ணைக்குள் வருகை தரும் யானைகளினால் விதை சேகரிப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் பாதுகாப்பற்ற தன்மை உருவாகியுள்ளது.

மரமுந்திரிகை பண்ணை சூழலில் இருந்து யானைகளினை தூர இடங்களுக்கு விரட்டி விடுவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜெயபுரம் வடக்கில் இருந்து மர முந்திரிகை பண்ணையில் கூடுதலான பணியாளர்கள் பணியில் ஈடுபடுகின்றார்கள். யானைகளின் தொல்லை தொடர்பாக பல தடவைகள் பல இடங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் பண்ணைத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி-350)

# கால்நடைகளால் பாதிப்படையும் நிலக்கடலை செய்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி ஜெயபுரம் வடக்கில் நிலக்கடலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் கால்நடைகளினால் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

ஜெயபுரம் வடக்கு சுன்னாவில் குளப்பகுதியில் 30 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பூநகரி செம்மங்குன்று பகுதியில் இருந்து வருகை தரும் கால்நடைகள் நிலக்கடலைச் செய்கையினை அழித்து வருவதாக பயிர்ச் செய்கையாளர்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக கடந்த காலங்களில் பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் தகவல்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் விசனம் வெளியிட்டனர். (நி-350)

# தேர்தல் விதிமுறை மீறல் புதுக்குடியிருப்பில் மூவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கைவேலி பகுதியில் தேர்தல் விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கைவேலி பகுதியில் தேர்தல் விதிமுறைகளை மீறி மக்களை ஓர் இடத்தில் ஒன்று திரட்டி காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குவதாகவும், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொடுப்பதாகவும் வாக்குறுதிகளை கூறி மக்களிடம் 200 ரூபாய் பெறப்பட்டு விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகத்தினை சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் அவர்களிடம் இருந்த படிவங்களை பறிமுதல் செய்ததுடன் ஐக்கிய தேசியக் கட்சியினை சேர்ந்த இருவர் மற்றும் வீட்டு உரிமையாளர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-299)

# புதிதாக அமைக்கப்படும் பழக்கடைத் தொகுதி

(அக்கராயன்)

கிளிநொச்சி முழங்காவில் பொதுச்சந்தையில் பழக்கடைத் தொகுதி ஒன்று பூநகரி பிரதேச சபையினால் அமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பழங்கள், வெற்றிலை மற்றும் மரக்கறிகள் கூடுதலாக உற்பத்தி செய்யப்படும் இடமாக முழங்காவில் காணப்படுகின்றது. கூடுதலான பழச்செய்கையாளர்கள் தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதில் சிரமங்களை எதிர் கொண்டுள்ள நிலையில் தற்போது அமைக்கப்படும் பழக்கடைத் தொகுதி ஊடாக பழங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்யக் கூடிய நிலைமை உருவாகியுள்ளது. இதன் மூலம் முழங்காவில் பழச்செய்கையாளர்கள் நன்மையடைவார்கள். (நி-350)

# 'கரை எழில்' இற்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கரைச்சி பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையினால் வெளியிடப்படும் 'கரை எழில்' கலாசார நூலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. கரைச்சி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேச மக்களின் கலை, கலாசார, வழிபாடு, மரபுகள், வாழ்வியல் முறைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஆக்கங்கள் யாவும் A4 தாளில் 200-300 சொற்களுக்கு இடைப்பட்டதாக இருப்பதுடன் சொந்த ஆக்கங்களாக இருக்க வேண்டும். ஆக்கங்கள் அனைத்தும் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், கரைச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் அறிவித்துள்ளார். (நி)

# இராசிபலன்

05.09.2024
ஆவணி 20, வியாழக்கிழமை,
துதியை மு.ப 11.34 மணிவரை

உத்தரம் காலை 6.34 மணி வரை
சுபநேரம் -7.35-9.05 மணிவரை
ராகுகாலம்- 1.35-3.05 மணிவரை

சந்திராஷ்டமம்- அவிட்டம்

வளவன்



மற்றவர்கள் மன நிலையை அறிந்து செயற் படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள் ,செய் தொழில் மேன்மையுண்டு.



புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வழிபாட்டால் ஆர்வம் கூடும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகுகம்,



சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கென நினைத்துக் கொள்ள வேண்டியநாள், பொருளாதார ரீதியில் உயர வழிவகை செய்வீர்கள்.



வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோஷம் கூடும், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும்.



பிள்ளைகள் வழியில் பெருமை தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள.



புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், சுப செய்திகள் இல்லம் தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.



சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும் , குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,போசன சுகமுண்டு.



கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிக்கும், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.



பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாளதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள்.



பணத்தேவைனள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.



தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பொது நல ஈடுபாடுகள் அதிகரிக்கும் நாள், காரிய அனுகூலம் உண்டு.



வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், வாழ்வாதாரம் திருப்தி தரும் வகையில் அமையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் அன்பிலும் சமரசத்திலும் நிற்கிறது.

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 572





செய்தியைச் சொல்லிவிட்டுக் காஞ்சிக்குப் போக விரும்பினான். எல்லாருக்கும் மேலாகத் தான் அதிகம் கடமைப்பட்டிருப்பது ஆதித்த கரிகாலருக்கு அல்லவா? அவரை எத்தனையோ வித அபாயங்கள் சூழ்ந்திருப்பது உண்மை. பார்த்திபேந்திரன் கூடப் பழுவூர் ராணியின் மாய வலையில் விழுந்து விட்டான். எந்தக் காரியத்திலும் படபடப்புடன் இறங்கக் கூடியவரான ஆதித்த கரிகாலர் எப்போது எந்தவித அபாயத்துக்கு உள்ளவாரோ தெரியாது. அவரிடம் சென்று அவரைக் காத்து நிற்பது தன் முதன்மையான கடமை. வழியில் வீண்பொழுது போக்குவது பெருங்குற்றம். இந்தக் கணமே சென்றுவிட வேண்டும்.

யாரைச் சொல்கிறாய்? "வேறு யாரை? மதுராந்தகத் தேவனைத்தான் சொல்கிறேன்! இது கூட உனக்குத் தெரியவில்லையா? அது எப்படி? மற்ற இரண்டுபேர்?"

"ஒருவன் தான் கடலில் முழுகி இறந்துவிட்டானாம். இன்னொருவனுடைய காலம் குறுகிக் கொண்டிருக்கிறது"

வந்தியத்தேவன் அதற்கு மேல் அந்தக் காலாமுகச் சாமியார்களின் பேச்சைக் கேட்கச் சிறிதும் விரும்பவில்லை. அவர்களுடன் பேச்சுக் கொடுக்கவும் எண்ணவில்லை.

விரைவிலே பழையாறை அடைந்து இளவரசியிடம்

வந்தியத்தேவன் சப்தமில்லாமல் திரும்பிச் சென்று குதிரை மீது ஏறிக்கொண்டான். குதிரையை வேகமாகத் தட்டிவிட்டான். காலாமுகர்களின் குகையோரமாகச் சென்றபோது அவர்கள் தன்னை வெறித்து நோக்குவதைக் கண்டான். ஒரு முகம் அவன் எப்போதோ பார்த்த முகம் போலத் தோன்றியது. ஆனால் நின்று பார்க்க விருப்பமின்றி மேலே சென்றான்.

வழியில் ஜன நெருக்கமான பல கிராமங்களை அவன் பார்த்தான். அங்கேயெல்லாம் இளவரசர் கடலில் மூழ்கியது பற்றிய செய்தி இன்னும் பரவவில்லையென்று தெரிந்தது. ஏனெனில் ஜனங்கள் சாவதானமாக அவரவர்கள் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அதுவரையில் நல்லதுதான். இளவரசரைப் பற்றிய செய்தி பழையாறையை அடைவதற்குள் தான் அங்கே போய்ச் சேர்த்துவிட வேண்டும். இளைய பிராட்டியிடம் உண்மையை அறிவித்துவிடவேண்டும். குந்தவை தேவியின் காதில் வேறுவிதமான செய்தி விழுந்தால் ஏதாவது விபரீதம் நேரிட்டுவிடலாம் அல்லவா? இளைய பிராட்டியாவது நம்புவதற்குத் தயங்கலாம். அந்தக் கொடும்பாளூர் இளவரசி உயிரையே விட்டாலும் விட்டுவிடுவாள்! இந்த எண்ணம் வந்தியத்தேவனுக்கு மிக்க பரபரப்பை உண்டாக்கிற்று. ஆனால் அவனுடைய அவசரம் குதிரைக்குத் தெரியவில்லை. கால்களில் புதிதாக லாடம் அடிக்கப்பட்டிருந்த அக்குதிரை வழக்கமான வேகத்துடன் கூட ஓட முடியாமல் தத்தளித்தது. கடைசியாகப் பிற்பகலில் சூரியன் அஸ்தமிப்பதற்கு இரண்டு நாழிகை இருந்தபோதுதான் பழையாறைக் கோட்டையின் பெரிய சுவர் அவனுக்குப் புலப்பட்டது.

அதோ, கோட்டை வாசலில் துர்க்கையின் கோவில் தெரிகிறது. கோட்டைக்குள் எப்படிப் பிரவேசிக்கிறது என்பதைப் பற்றி எத்தனையோ யோசனைகள் அவன் உள்ளத்தில் மின்னல் வேகத்தில் படையெடுத்து வந்தன. ஆனால் ஒன்றும் காரிய சாத்தியமாகத் தோன்றவில்லை. பனைமுத்திரை மோதிரமோ இங்கே பயன்படாது. ஏனெனில் அந்த மோதிரத்துடன் வருவான் என்பது முன்னமே கோட்டைக் காவலர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கும். இப்போது மோதிரத்தைப் பார்த்ததும் வேறு விசாரணையின்றிச் சிறைப்படுத்தி விடுவார்கள். சின்ன பழுவேட்டரையரிடம் அவனை அனுப்பிவிடுவார்கள். இளைய பிராட்டி குந்தவை தேவியைப் பார்ப்பதற்கு முன்னால் அவ்விதம் அகப்பட்டுக் கொள்ள அவன் சிறிதும் விரும்பவில்லை.

யோசனை செய்த வண்ணம் குதிரையின் வேகத்தை அவன் குறைத்துக்கொண்டு கோட்டை வாசலை நெருங்கியபோது மற்றொரு திசையிலிருந்து ஒரு கூட்டம் வருவதைக் கண்டான்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## கிராமவாசியின் பெருந்தன்மை

கிராமத்திலே படித்து, பட்டணத்தில் வேலையில் இருந்தான் ஒருவன். அவன் பெற்றோர் பல ஆண்டுகளுக்கு முன்னே இறந்து விட்டனர். அவனுக்கு வீடும் கிடையாது. உறவு என்று சொல்ல ஒருவன் மட்டுமே இருந்தான். இருவரும் ஒத்த வயதினர்.

மூன்று, நான்கு ஆண்டுகளுக்குப் பின் கிராமத்துக்கு வந்து உறவினர் வீட்டில் தங்கினான்.

அவர்கள் இருவரும் இளம் வயது முதல் சமீப காலம் வரை பல விடயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது, கிராம வாசிகள் எளிதில் ஏமாந்து விடுவார்கள் என்றான் பட்டணவாசி.

"ஏமாறுவார்கள் என்று சொல்ல இயலாது கள்ளம், கபடம்" இல்லாத பெருந்தன்மை வாய்ந்தவர்கள் என்றான் கிராமவாசி.

ஊரைச் சுற்றிப் பார்த்து வருவதாக புறப்பட்டான் பட்டணவாசி.

வாரச்சந்தை நடக்கும் இடத்தில் நின்று கீழே குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான் பட்டண வாசி.

ஒவ்வொருவராக அவனைச் சுற்றி கூட்டம் கூடிவிட்டது. ஏதாவது தொலைந்து விட்டதா? என்று அவர்கள் கேட்டனர்.

"ஆம், அரை பவுன் மோதிரம் விரலிலிருந்து விழுந்து விட்டது" என்றான் பட்டணவாசி.

அருகில் நின்றவர்கள் பலர் சுற்று முற்றும் தேடலானார்கள்.

அதற்குள் அவன் தங்கியிருந்த உறவினனுக்குத் தகவல் எட்டி அவனும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தான். விசாரித்தான். இருவரும் வீட்டுக்குச் சென்றனர்.

"நியாயமாகச் சம்பாதித்திருந்தால் பொருள் கிடைக்கும்" என்றான் ஒருவன்.

"கீழே விழுந்த பொருள், எங்கேயாவது கிடைத்தது உண்டா?" என்றான் மற்றொருவன்.

"அவனுக்கு என்ன பட்டணவாசி, அங்கே போய், வேறு மோதிரம் வாங்கிப் போட்டுக் கொள்வான்" என்றான் வேறொருவன் இப்படியாக பலர் பேசலானார்கள்.

"இரவு நான் புறப்படுகிறேன். எனக்கு ஐநூறு ரூபாய் கடனாகக் கொடு போனதும் அனுப்புகிறேன்" என்றான் பட்டண வாசி.

ஐயோ பாவம்! அவன் தான் மோதிரத்தைத் தொலைத்து விட்டானே அவனுக்குக் கொடுக்காமல் இருக்கலாமா? பெருந்தன்மையோடு, "என்னிடம் நூறு ரூபாய் தான் இருக்கிறது" என்று கூறி, நூறு ரூபாயைக் கொடுத்தான் கிராமத்து உறவினன்.

பட்டணத்தானின் மோதிரம் தொலைந்தது உண்மையோ, பொய்யோ என்று பாராமல் கிராமத்து நண்பன் பெருந்தன்மையோடு நடந்து கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மை நாம் மாற்றும் போதே உலக மாற்றம் ஏற்படும்; இதுவே இத்தருணத்தில் அனைவரும் ஈடுபட வேண்டிய முக்கிய பணியாகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாக்குகளின் பெறுமதியை உணர்ந்து வாக்களிப்போம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமாகியுள்ளது.

தேர்தல் கடமையில் ஈடுபடுகின்ற அரச உத்தியோகத்தர்கள் தபால் மூல வாக்களிப்பை மேற்கொள்வர்.

பொதுவில் தேர்தல் முடிவுற்று தபால் மூல வாக்களிப்பின் விபரம் வெளிவரும்போது, அது சார்ந்து பொதுமக்களின் வாக்களிப்பு நிலையும் இருப்பது அனுபவத்தில் கண்டறியப்பட்ட உண்மை.

எனினும் தபால்மூல வாக்களிப்பிலும் செல்லுபடியற்ற வாக்குகள் இருப்பதுதான் வேதனைக்குரியது.

ஆம், அரச உத்தியோகத்தில் இருக்கக்கூடியவர்கள் தபால்மூலம் வாக்களிக்கும் போது, அந்த வாக்குகள் நூறு வீதம் செல்லுபடியானதாக இருக்க வேண்டும்.

இருந்தும் தபால்மூல வாக்குகளிலும் செல்லுபடியற்ற வாக்குகள் உள்ளதெனில், குறித்த அரச உத்தியோகத்தர்கள் தாங்கள் அளிக்கின்ற வாக்குகளைச் சரியாக அளிக்க வேண்டும் என நினைக்கவில்லை என்பது தெரியவருகிறது.

தவிர, வாக்களிப்பு முறையை அவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை என்பதும் வாக்களிப்பது பற்றிப் போதிய அறிவுறுத்தல்கள் விடப்படவில்லை என்பதும் இங்கு உணர்தற்குரியது.

எதுஎவ்வாறாயினும் வாக்களிப்பதென்பது ஏனோதானோ என்று செய்கின்ற ஒரு விடயமன்று.

மாறாக, வாக்குகள் ஒருநாட்டின் ஆட்சித் தலைமையைத் தேர்ந்தெடுப்பதற்கான அங்கீகாரமாக அமைகின்றன.

இதுதவிர, ஒரு தேர்தலை நடத்தி முடிப்பதற்காக நாடு செலவிடுகின்ற பணத்தின் அளவு, தேர்தலை நடத்தி முடிப்பதற்காகத் தேர்தல் பணியில் ஈடுபடுகின்றவர்களின் மனித உழைப்பு, இவற்றையும் கடந்து ஜனநாயகத்தின் வலிமையுடன் ஆட்சிப்பீடம் ஏறுவதற்காக வேட்பாளர்களும் அவரவர் கட்சிகளும் செலவிடுகின்ற மனித மணித்தியாலங்கள்.

வேட்பாளர்களின் பிரசாரங்கள், அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் எனத் தேர்தல் சார்ந்த விடயங்களில் அவதானம் செலுத்துகின்ற மக்களின் நம்பிக்கைகள் என எத்தனையோ பெறுமதியான விடயங்கள் உள்ளடங்கி இருக்கும்போது, ஏதோ தேர்தல் வந்துவிட்டது. ஒரு புள்ளடியைப் போட்டுவிடுவோம் என்ற நினைப்போடு வாக்களிப்பு இடம்பெறுமாயின், அதைவிட்ட அபத்தம் வேறுஎதுவுமாக இருக்க மாட்டாது.

எனவே வாக்குரிமை என்பது ஜனநாயகத்தின் அத்திபாரம். ஆகையால் வாக்களிக்கின்ற ஒவ்வொருவரும் தமது வாக்குகளைப் பெறுமதியாக மதித்து அதனை வழங்க வேண்டும்.

அதிலும் யாருக்கு வாக்களிப்பது என்ற விடயத்திலும் நிதானமாகச் செயற்படுவது வாக்காளர்களின் தலையாய பொறுப்பாகும்.

### மிருசுவில் படுகொலை சூத்திரதாரிக்கு

# கோட்டாபய பொது மன்னிப்பு வழங்கியதை சவாலுக்குட்படுத்திய மனுக்கள் விசாரணைக்கு

மிருசுவில்படுகொலை தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள்இராணுவ அதிகாரி சுனில் ரத்நாயக்கவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுக்களை அடுத்தாண்டு ஜனவரி 15ஆம்திகதி விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம்தீர்மானித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் 2020ஆம் ஆண்டு முன்னாள் இராணுவ அதிகாரி சுனில் ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பை எதிர்த்தும், அந்த தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்குமாறும் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மிருசுவில் படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நாயகம் அம்பிகா சற்குணநாதன் ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2000 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் திகதி மிருசுவில் கிராமத்தில் தங்களுடைய சொத்துக்களைப் பரிசோதிப்பதற்காகத் திரும்பி வந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்த எட்டு அகதிகளை கொலை செய்து யாழ்ப்பாணத்திலிருந்து 16 மைல் தொலைவிலுள்ள புதைகுழியில் அவர்களின் சடலங்களைப் புதைத்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

சம்பவம் தொடர்பில் 5 இராணுவ சிப்பாய்களுக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப் பத்திரிகைத்தாக்கல் செய்திருந்த நிலையில், சுனில் ரத்நாயக்கவிற்கு எதிரான குற்றச்சாட்டுகள் போதிய ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டதால் 2015 ஆம் ஆண்டு அவருக்கு மரண தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்ததுடன், ஏனைய 4 இராணுவத்தினர் குறித்த போதிய ஆதாரங்கள் இல்லாததால் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பூடாக குறித்த நபரை வழக்கிலிருந்து விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# வீடுவீடாகச் சென்று தேர்தல் பிரசாரம் செய்யத் தடை

## தேர்தல்கள் ஆணைக்குழு

*(கொழும்பு)*

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக வீடு வீடாகச் செல்வதை உடனடியாகத் தடுக்குமாறு பொலிஸாருக்கு தேர்தல் ஆணைக்குழு நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதுபோன்ற பிரசாரங்கள் செய்வதைத் தடுக்க பொலிஸார் நடமாடும் ரோந்துப் பணியை அதிகரிக்கவும் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பிட்ட சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வீடுவீடாகச் சென்று வருவதாக ஏராளமான புகார்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுபோன்ற செயல்கள் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு இடையூறாக இருப்பதாக ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் நடத்தப்படும் தேர்தல் அலுவலகங்கள் தொடர்பில் சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு தேர்தல் ஆணைக்குழு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளது. (ம-7)

### வர்த்தகர் படுகொலை

# கொழும்பு மேல் நீதிமன்றால் குற்றவாளிக்கு மரண தண்டனை

கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரைக் கடத்தி அவரைக் கொலை செய்துவிட்டுத் தங்கம் மற்றும் 38 இலட்சம் ரூபாய் பணம் என்பவற்றைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த ஒருவருக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

இந்த மரண தண்டனை உத்தரவை கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெதிகே நேற்று பிறப்பித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி சின்னதுரை சுரேகா ராஜா என்ற தங்க ஆபரண வர்த்தகரை அவரது வாகனத்துடன் கடத்திச் சென்று புசல்லாவைப் பகுதியில் வைத்துக் கொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### வழக்கில் ஆஜராகாத

# சட்டத்தரணியொருவர் பணியிடை நீக்கம்

*(கொழும்பு)*

பணத்தைப் பெற்றுக் கொண்டு நீதிமன்றத்தில் முறையாக ஆஜராகாத சட்டத்தரணி ஒருவரின் சட்டத் தொழிலை ரத்து செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரண்டு காணி வழக்குகளில் ஆஜராவதற்காக குறித்த சட்டத்தரணி உரிமையாளரிடம் இருந்து 44 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு முறையாக ஆஜராகவில்லை என உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழக்கை விசாரித்த மன்று சட்டத்தரணியின் சட்டப் பணிக்கு தடைபிறப்பித்ததுடன் மூன்று மாதங்களுக்குள் மூன்று மில்லியன் ரூபா நட்ட ஈட்டுத் தொகையை மனுதாரருக்கு வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

### வட்டு – சித்தங்கேணி வீதியில்

# மோ.சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம்

சித்தங்கேணி வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று, குறித்த இடத்தில் வலது பக்கத்தில் உள்ள கிளை வீதிக்கு திரும்ப முற்பட்ட வேளை அதே திசையில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிளின் சாரதியும், அவருக்குப் பின்னால் தலைக்கவசம் இன்றிப் பயணித்த முதியவரும் காயமடைந்தனர்.

முதியவர் சம்பவ இடத்தில் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# அடுத்த மாதம் முதல் புதிய கடவுச்சீட்டுகள்

## குடிவரவு – குடியகல்வுத் திணைக்களம்

*(கொழும்பு)*

ஒக்ரோபர் மாதத்திற்குள் புதிய பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கிய கடவுச்சீட்டுகள் நாட்டுக்குக் கிடைக்குமென குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

50 இலட்சம் புதிய கடவுச்சீட்டுகளைக்கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் முதல் தொகுதியாக 50ஆயிரம் கடவுச்சீட்டுகள் நாட்டுக்குக் கிடைக்குமென குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## சாவகச்சேரி பிரதேசசபை

## சபைநிதி வேலைத்திட்டங்கள் (கட்டம் III)-2024

1.சாவகச்சேரி பிரதேசசபை சார்பாக உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்த தாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி களை கோருகின்றார்.

2விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3ஒப்பந்ததாரர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி / கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்வி தாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

4.தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்ட வணை (Schedule -5) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதிசேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்வி தாரருக்கு மாத்திரமே வரிக்கொடுப்பனவை கோர முடியும்.

6.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியிலுள்ள சாவகச்சேரி பிரதேசசபையில் (தொலைபேசி: 021-205 0348, 021 205 0356 தொலைநகல் : 021 205 0348) மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள லாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2024.09.05 தொடக்கம் 2024.09.24 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09:00 மணிமுதல் 15:00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

7.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு, சாவகச்சேரி பிரதேச சபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 2024.09. 05 ஆம் திகதியிலிருந்து 2024.09.24 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக்கும் மாலை 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபாய். 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

8.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனியாக உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக் குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரிக்கு 2024.09.25 ஆம் திகதி மாலை 02:00 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் அனைத்தும் அன்றைய தினமே (2024.09.25) மாலை 2.30 மணிக்கு திறக்கப் படும். இதன்போது கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி (ஒருவர் மாத்திரம்) கலந்துகொள்ளமுடியும்.

9.கீழ் காட்டப்படும் கேள்விகள், கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து NP/14/41/(6)/2/C.F/2024/ 39-56 இலக்க வேலைக்கு 63 நாட்கள் (2024.11.28) மற்றைய வேலைகளுக்கு 77 நாட்கள் (2024.12.12) வரையும் செல்லுபடியாகும்.

10கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். கேள்வி பிணையானது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் பிணைமுறி மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

11.கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2024.09.12ஆம் திகதி மாலை 3:00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ள முடியும்.

| தொடர் இல | கேள்வி இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/41/(6)/2/C.F/2024/39,40,41,42 | கேலத்து அம்மன் வீதி புனரமைப்பு மந்துவில் மேற்கு<br>விநாயகர் வீதி புனரமைப்பு மந்துவில் கிழக்கு<br>நந்திவளை பிரம்படி இணைப்பு வீதி புனரமைப்பு மந்துவில்<br>வரணி மகாவித்தியாலய வீதி புனரமைப்பு வரணி | 4.90 | 90 | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 49,500.00 | 2024.12.26 |
| 2 | NP/14/41/(6)/2/C.F/2024/43,44,45,46 | அறிவொளி சனசமூகநிலைய வீதி புனரமைப்பு மட்டுவில்<br>சந்திரமௌலீசா வித்தியாசாலை வீதி புனரமைப்பு மட்டுவில்<br>நாவலடி வீதி புனரமைப்பு மட்டுவில்<br>வாகையடி வீதி புனரமைப்பு மட்டுவில் | 4.23 | 90 | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 42,500.00 | 2024.12.26 |
| 3 | NP/14/41/(6)/2/C.F/2024/47,48,49,50 | 9வது குறுக்குவீதி (ABC அருகாமை வீதி) புனரமைப்பு கைதடி<br>அரசடி வீதி பிலிப் வீதி இணைப்பு முதலாவது குறுக்கு வீதி புனரமைத்தல் மட்டுவில்<br>கமலாசினி பாடசாலை வீதி புனரமைத்தல் மட்டுவில்<br>ஊரியான் 2வது வீதி புனரமைப்பு கைதடி | 4.26 | 90 | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 43,000.00 | 2024.12.26 |
| 4 | NP/14/41(6)/2/C.F/2024/51 | வீரசிங்கம் பாடசாலை வீதி புனரமைப்பு மீசாலை | 4.01 | 90 | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 40,500.00 | 2024.12.26 |
| 5 | NP/14/41/(6)/2/C.F/2024/52,53,54,55,56 | தேவாலய வீதி புனரமைப்பு உசன் மிருசுவில்<br>5வது குறுக்கு வீதி புனரமைத்தல் உசன் மிருசுவில்<br>கரம்பகம் பாடசாலை வீதி புனரமைத்தல் மிருசுவில்<br>நவிண்டான் வீதி புனரமைப்பு மிருசுவில்<br>பழைய பாடசாலை வீதி புனரமைப்பு எழுதுமட்டுவாள் | 4.38 | 90 | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 44,000.00 | 2024.12.26 |
| 6 | NP/14/41/(6)/2/C.F/2024/57,58,59,60,61 | நல்லாசிரியர் கணபதிப்பிள்ளை வீதி புனரமைப்பு மறவன்புலவு<br>கொற்றங்குடை 5வது குறுக்கு வீதி புனரமைப்பு (இலகடி வீதி) கைதடி<br>கல்லாகம் வீதி புனரமைத்தல் கைதடி<br>மூத்தலாபுலராவத்தை வீதி புனரமைத்தல் கைதடி<br>நவபுரம் தெற்கு வீதி புனரமைப்பு கைதடி | 5.01 | 90 | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 50,500.00 | 2024.01.09 |
| 7 | NP/14/41/(6)/2/C.F/2024/62,63,64, | சந்தை வீதி புனரமைத்தல் மிருசுவில் வடக்கு<br>மிருசுவில் G.T.M.S பாடசாலை பின் வீதி புனரமைத்தல் மிருசுவில்<br>மருதங்குளம் வீதி புனரமைத்தல் எழுதுமட்டுவாள் வடக்கு | 5.69 | 90 | C7 & C6 (வீதி நிர்மாணம்) | 57,000.00 | 2025.01.09 |
| 8 | NP/14/41/(6)/2/C.F/2024/65,66,67,68,69 | மருதடிப்பிள்ளையார் வீதி புனரமைப்பு கொடிகாமம்<br>நவிண்டான் 1வது குறுக்கு வீதி புனரமைப்பு கொடிகாமம்<br>காளிகோவில் வீதி 14வது வீதி தவசிகுளம்<br>கெற்பேலி பாலாவி தெற்கு ஊரெல்லை வீதி புனரமைப்பு<br>நாவலடி வீதி புனரமைப்பு கெற்பேலி விடத்தற்பளை | 5.29 | 90 | C7 & C6 (வீதி நிர்மாணம்) | 53,000.00 | 2025.01.09 |

விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இவ் விலைக் கேள்வி மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் பிறவரிகள் நீங்கலாக) ரூபா 50 மில்லியன் தொகைக்குள் இருப்பின், பிராந் திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(III) மற்றும் பின்னூட்டலில் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை,**

**05.09.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகரிக்கும்...

மாதம் 31ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அதேநேரம் நேற்றுமுன்தினம் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 154 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## தபால் மூல...

தபால் மூல வாக்களிப்பு இடம் பெறும் தினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்கு செப்ரெம்பர் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் மேலதிக நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இம்முறை கொழும்பு மாவட்டத்தில் 27195, கம்பஹா மாவட்டத்தில் 52486, களுத்துறை மாவட்டத்தில் 37361, காலி மாவட்டத்தில் 41436, மாத்தறை மாவட்டத்தில் 30882 மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 22167 தபால் மூல வாக்கு விண்ணப்பங்கள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட, ஏற்றுக்கொள்ளக்கூடிய தபால் வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 712,319 ஆகும். தகுதியுள்ள வாக்காளர்கள் அனைவரும் தபால் வாக்களிப்பில் கலந்து கொண்டு வாக்களிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது. (ம-7)

## கண்காணிப்...

வேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி கூறினார்.

நாட்டின் 22 தேர்தல் தொகுதிகளிலும் கண்காணிப்புப் பணிகள் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தபால்மூல வாக்களிப்பை கண்காணிக்க நடமாடும் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார். (ம-7)

## இரண்டு...

இதில் உருத்திரபுரத்தினைச் சேர்ந்த வைகுந்தவாசன் குமணன் (வயது-25) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த மற்றைய நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,100,315)

## நாட்டை...

சாரக் கூட்டத்தில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றவர்களை தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கடந்த இரண்டரை ஆண்டுகளாகப் பாதுகாத்து வந்துள்ளது.

நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றவர்களுக்கு எதிராக எமது அரசாங்கத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அவர்கள் கொள்ளையிட்ட நாட்டின் சொத்துக்கள், தேசிய வளங்கள் மற்றும் நிதியங்கள் என்பவற்றை மீளப்பெற்று அதனூடாக நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் என்றார். (ம-7)

## மக்களை...

தவறாக வழிநடத்த முயல்கின்றது என பெப்ரல் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை எதிர்வரும் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய மூன்று தீர்மானங்களை எடுத்துள்ளது என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தீர்மானங்களை எடுப்பதற்கு அமைச்சரவைக்கு உள்ள அதிகாரம் குறித்து நான் முரண்படவில்லை, எனினும் இந்த மூன்று தீர்மானங்களும் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். இவை பாரதூரமானவை என அவர் தெரிவித்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னரே அரசாங்கம் ஒருபோதும் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் மூலம் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

உத்தேச சம்பள அதிகரிப்பை வழங்குவது என்றால் அரசாங்கத்திற்கு மாதமொன்றிற்கு 20 மில்லியன் தேவை எனத் தெரிவித்துள்ள ரோகண ஹெட்டியாராச்சி இவ்வாறான அறிவிப்புகள் மூலம் அரசாங்கம், அரசாங்க ஊழியர்களை ஏமாற்ற முயல்கின்றது எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## புங்குடுதீவில்...

என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## அமைச்சரவைத்...

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான தேர்தல் நடைமுறைகளிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்த அமைச்சரவைத் தீர்மானம் குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தேர்தல் நடைமுறைகளிற்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றனவா? என்பதை கண்டுபிடிப்பதற்கான அதிகாரம் எங்களிற்கு உள்ளது. முறைப்பாடு இல்லாவிட்டாலும் நாங்கள் இந்த நடவடிக்கையை எடுக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

முறைப்பாடுகள் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் எங்களால் தேர்தல் நடைமுறைகளிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் எனத்தெரிவித்துள்ள அவர் அமைச்சரவையின் தீர்மானங்கள் கிடைத்ததும் நாங்கள் தேர்தல் நடைமுறைகளிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் ஏதாவது உள்ளனவா? என ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## மரு...

டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## இளைஞர்கள்...

கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டமைக்கு நாம் மன்னிப்பு கோருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், ஒக்ரோபர் மாதம் முதல் சாதாரண கடவுச்சீட்டுக்களுக்குப் பதிலாக டிஜிட்டல் முறையிலான கடவுச்சீட்டுக்களை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

டிஜிட்டல் முறையிலான கடவுச்சீட்டுக்களைக் கொண்டுவருவதில் சிறிய தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அதற்கு அரசாங்கம் என்ற வகையில் நாம் பொறுப்பெடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் கடவுச்சீட்டுக்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தாலும் டிஜிட்டல் முறையிலான கடவுச்சீட்டுகளை அறிமுகம் செய்வதில் நாம் திட்டவட்டமாக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.09.04
சீட்டிழுப்பு இலக்கம் 5586
Q 8 1 3 9 2 4
அத சம்பத
Q 3 9 2 4
சீட்டிழுப்பு இலக்கம் 161
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.09.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1616
P 10 37 38 40 P
55743

மெகா பவர்
திகதி 04/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1934
V 08 06 32 33 67
76291

லக்கி 7 VIP
திகதி 2024.09.04
சீட்டிழுப்பு இலக்கம் 412
J 0 5 3 3 4 0 J

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3828
சீட்டிழுப்பு திகதி 04.09.2024
V 04 18 36 66
V 88259
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.04
சீட்டிழுப்பு இலக்கம் 0895
தனுசு 21 22 38 43 தனுசு
49282 02

சுப்பர் பென சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
04.09.2024 வெற்றி வாரம் 294 வர்ணம் பச்சை
L 8 9 2 1 3 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,388,416.00
53834
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2560 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 04.09.2024 தினம் புதன்கிழமை
12 23 67 71 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,839,588.00

சனிதா
திகதி 2024.09.04 வெற்றி வாரம் 4721
07 26 28 63 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,005,682.40
62034

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4272 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.09.04 தினம் புதன்கிழமை
01 03 15 27 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,999,488.80
131604

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 02 03 39 61 70
1736
இள நீலம்
04.09.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 542,991,851.40

ஜயோதா Jayoda
திகதி 2024.09.04 வெற்றி வாரம் 2057 வர்ணம் மஞ்சள்
04 07 11 14 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,200,139.60

புதன்கிழமை
வெற்றி வாரம் : 2386
சீட்டிழுப்பு திகதி : 2024.09.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,244,242.40
ADA KOTIPATHI
08 44 48 76 N
456998


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1122)

076 825 7716 (ஆகாஸ்)

# என்னை சிறையில் அடைத்து கொலை செய்திட அரச தரப்பு கடும் பிரயத்தனம்

## சபையில் முஜிபுர் ரஹ்மான் பகிரங்கம்

(கொழும்பு)

ஏதாவது ஒரு வகையில் தம்மை சிறையில் அடைப்பதற்கு அல்லது உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கான சூழ்ச்சி இடம்பெற்றுவருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார உள்ளிட்டவர்கள் கடந்த 3 நாட்களுக்கு முன்னர், வெலிக்கடைச் சிறைச்சாலையின் கைதியொருவரை சந்தித்து தமக்கு எதிராக வாக்குமூலம் பெறுவதற்கு முயற்சித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு சன்மானமாக பல்வேறு வரப்பிரசாதங்களைக் குறித்த சந்தேக நபருக்கு வழங்குவதாக அவர்கள் உறுதியளித்துள்ள தாகவும்,

குறித்த சந்தேக நபரைச் சந்தித்தமைக்கான சாட்சியங்கள் தம்மிடம் இருப்பதாகவும், எதிர்வரும் நாட்களில் தான் அது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டார். (ம-7)

**மணப்பெண் தேவை**

- இணுவில், இந்து, கௌரவ குடும்பம், 1990, அனுசம், Quantity Surveyor, அவுஸ்திரேலியா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இளவாலை - கட்டுவன், இந்து, கௌரவ குடும்பம், 1991, திருவோணம், Msc Engineer, Australia, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இடைக்காடு - காரைநகர், இந்து, கௌரவ குடும்பம், 1992, சித்திரை, MBBS Doctor, Australia, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- Trincomalee, இந்து, கௌரவ குடும்பம், 1993, பூராடம், Bachelor of Engineering, Newzealand மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- திருநெல்வேலி, இந்து, கௌரவ குடும்பம், 1994, ரோகிணி, BEng Computer Science, London மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை, இந்து, கௌரவ குடும்பம், 1989, கேட்டை, Phd in Civil Engineering, Lecturer மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவ குடும்பம், 1988, உத்தரம், Phd in Engineering, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மானிப்பாய் - அச்சுவேலி, இந்து, கௌரவ குடும்பம், 1987, பரணி, Charted Management Accountant, London மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை - சாவகச்சேரி, இந்து, கௌரவ குடும்பம், 1987, பூசம், Bsc Engineer, Newzealand, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(1859)

www.thaalee.com | 077 539 3728 | 077 803 8193

**இந்தியன் விசா சேவைகள்**

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
47,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம். (307)

**APEX TRAVELS**

0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

**காணி விற்பனைக்கு**

உரும்பிராய் வடக்கில் (பலாலி வீதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில்) 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

தொடர்புகளுக்கு:
077 948 6242

**கார் வாடகைக்கு**



Aarathana Tours & Travels (Pvt) Ltd

சாரதியுடன் Altro கார்கள் வாடகைக்கு உண்டு. (308)

077 332 2433
Chulipuram jaffna

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

# மரண அறிவித்தல்



மலர்வு 13 - 01 - 1963

உதிர்வு 03 - 09 - 2024

## விஜயலட்சுமி சண்முகவடிவேலு

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தித் திணைக்களம்)

யாழ்ப்பாணம் புத்தூரைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயலட்சுமி சண்முகவடிவேலு அவர்கள் நேற்று முன்தினம் (03.09.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - இராசம்மா தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சபாபதி - சரஸ்வதிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் சண்முகவடிவேலு அவர்களின் பாசமிகு மனைவியும் விசுவநாதன்,மகாலட்சுமி மற்றும் காலஞ்சென்ற வைகுந்தநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், துஷீபன் (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை), கீர்த்தனா (விடுதி நிர்வாகி யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரி), பிரணவன் (மென்பொருள் பொறியியலாளர் iLabs) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜேந்திரா (ஒழுக்காற்று அதிகாரி - யாழ். பல்கலைக்கழகம்) கஜனி (வைத்தியர் - தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும் சாதனிகா, சனாதனிகா, சைலொளிபவன், சைதன்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2024) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

375/8, முத்துதம்பி ஒழுங்கை, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. 077 406 3321 077 272 9286 குடும்பத்தினர் (1856)

**வங்கி மீதி வசதி (Show money)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள் (304)

தொடர்புகளுக்கு:
074 17 37 684

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணம் சுவாமியார் வீதியில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை. (உணவு, தங்குமிடம் வழங்கப்படும்) (309)

தொடர்புகளுக்கு :
077 472 4075

**விற்பனைக்குண்டு**

தொலைக்காட்சி 55 இஞ்சி, மேசை, கட்டில், மெத்தை, கதிரைகள், குளிர்சாதனப்பெட்டி, செற்றி, வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் Mahendrah max வாகனம் நல்ல நிலையில் உள்ளன. (1851)

076 166 3620
00447930615646 (Whats app)

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பெண் வேலையாள் தேவை (1861)

தொடர்புகளுக்கு:
077 073 5931

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியிலிருந்து கைதடி சந்தி செல்லும் பிரதான காப்பெற் வீதி முகப்புடன் 6 பரப்புக் காணி நிலப்பரப்பு விற்பனைக்குண்டு.

* இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
* உரும்பிராய் சந்தியிலிருந்து ½ Km தூரம்
* வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்தது. (1860)

077 288 0152, 077 294 1521

**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
42A, Chapel Street, Jaffna.
(C-1120)
College Of International Migration Skills
077 7068 777 / 077 7719 322

**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.